**செய்தி வெளியீடு எண்.479** **நாள்.26.6.2008**

# 300 கோடி ரூபாய் முதலீட்டில் ஒரகடத்தில் நோக்கியா சீமென்ஸ் நெட்வொர்க்ஸ் தொழிற்சாலை

## முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து

நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த, 'நோக்கியா சீமென்ஸ் நெட்வொர்க் பி.வி.' என்ற நிறுவனம் உலக அளவில், தொலைத் தொடர்பு சாதனங்களைத் தயாரித்து வழங்குகின்ற மூன்று பெரிய நிறுவனங்களில் ஒன்றாகும். அதன் துணை நிறுவனம் ' நோக்கியா சீமென்ஸ் நெட்வொர்க்ஸ் நிறுவனம்' ஆகும். இந்நிறுவனம், மொபைல் தயாரிப்புக்கான சாதனங்கள் மற்றும் நிலையான தகவல் உள்கட்டமைப்புக்கான சாதனங்களைத் தயாரிப்பதற்கும், இதர பல்வேறு மின்னணு வன்பொருள்களுக்கான சாதனங்களைத் தயாரிப்பதற்கும், சென்னைக்கு அருகில் ஒரகடத்தில் உள்ள சிப்காட் உயர் தொழில் நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், சிறப்புப் பொருளாதார மண்டல அமைப்பில் தொழிற்சாலை ஒன்றினை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

இத்தொழிற்சாலையின்மூலம் நோக்கியா சீமென்ஸ் நெட்வொர்க்ஸ் நிறுவனம் மூன்றாண்டுகளுக்குள் 300 கோடி ரூபாய் முதலீட்டில் ஏறத்தாழ 400 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பையும், 100 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பையும் அளிக்கும்.

நோக்கியா, மோட்டோரோலா, சாம்சங் போன்ற நிறுவனங்கள் சென்னையில் ஏற்கனவே தங்கள் தொழிற்சாலைகளை அமைத்துள்ள நிலையில், நோக்கியா சீமென்ஸ் நிறுவனத்தின் இப்புதிய தொழிற்சாலை, சென்னை 'இந்தியாவின் தொலைத் தொடர்பு வன்பொருள் மையம்' என்பதனை மேலும் உறுதிப்படுத்திட உதவும்.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில், இப்புதிய தொழிற்சாலையை அமைப்பதற்காக நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பாக, தொழில்துறைச் செயலாளர், திரு.எம்.எப். ஃபரூக்கி, இ.ஆ.ப., அவர்களும், நோக்கியா சீமென்ஸ் நெட்வொர்க்ஸ் நிறுவனத்தின் சார்பாக அந்நிறுவனத்தின் இயக்குநர் திரு. சுரேஷ் வாத்வானி அவர்களும் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திரு. எல். கே. திரிபாதி, இ.ஆ.ப., ஜெர்மனியில் உள்ள நோக்கியா சீமென்ஸ் நெட்வொர்க்ஸ் நிறுவனத்தின் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் திரு.க்ளாஸ் லட்ஸ், இந்திய தயாரிப்புச் செயல்பாடுகள் தலைவர் திரு. சதேந்திர சிங் மற்றும் நோக்கியா சீமென்ஸ் நெட்வொர்க்ஸ் நிறுவனத்தின் இதர மூத்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.